FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319482

1. District மாவட்டம் இராமநாதபுரம் PS: காவல்நிலையம் உலகசெல்வு Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 13/25 Date: நாள் 23.6.2025

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: பொ.த.சொ (திருத்தம்) 2018 Sections பிரிவுகள்: 7(a) உலகில் தப்பு

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: திருத்தச் சட்டம் 2018

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 23.6.2025 Date from : நாள் முதல் Date to : நாள் வரை மதியம் சுமார் 01.30 மணிக்கு

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.6.2025 Time : நேரம் 21.00 மணிக்கு

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-I Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 500 மீட்டர் தெற்கில்.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மீன்வளத்துறை உதவி இயக்குநர் (வடக்கு) அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ப. ஜீவானந்தம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பழையக்காரன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 27/2025 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் (g) Address : முகவரி 1/76, சோலையன் தெரு, பழைக்குளம் அக்கல், இராமநாதபுரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. சதுபம் சாதிக், மீன் வள அலுவலர், மீன்வள உதவி இயக்குநர் (வடக்கு) அலுவலகம், இராமநாதபுரம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன் : M.குமரேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 23.06.2025 ஆம் தேதி இரவு 21.00 மணிக்கு அலுவலக பணியில் இருக்கும் போது வாதி ப.ஜீவானந்தன் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று புகார்தாரர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் மீன்வள உதவி இயக்குநர் (வடக்கு) அலுவலகத்தில் பணிபுரியும் மீன்வளத்துறை ஆய்வாளர் சகுபர் சாதிக் என்பவரது முன்நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.13/2025 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 23.06.2025 ஆம் தேதி இரவு 21.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் விபரம் பின்வருமாறு அனுப்புநர் ப. ஜீவானந்தன், வயது 27/2025 த/பெ. பழையக்காரன், 1/76, சோகையன் தோப்பு, முருகன் கோவில் தெரு, பனைக்குளம் அஞ்சல், இராமநாதபுரம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23.6.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும்

23-6-2025 - 22.30 மணிக்கு

Name: பெயர் M. குமரேசன்
Rank: நிலை காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு,
இராமநாதபுரம்.

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 13/2025 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி:-

மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, இராமநாதபுரம். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் வாங்கிய இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகிற்கான உரிமம் பெறுவதற்கும், கடலில் மீன் பிடிப்பதற்கான அனுமதி பெறுவதற்கும் மீனவர் அடையாள அட்டை அவசியம் என்பதால் கடந்த 18.06.2025ஆம் தேதி இராமநாதபுரம் கலெக்டர் ஆபிஸ் வளாகத்தில் உள்ள மீன்வள உதவி இயக்குநர் (வடக்கு) அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த மீன்வளத்துறை ஆய்வாளர் சகுபர் சாதிக் என்பவரிடம் மீனவர் அடையாள அட்டை வேண்டி மனு கொடுத்தேன். அவர் என்னிடம் மேற்படி மனுவையும், எனது போன் நம்பரையும் பெற்றுக் கொண்டு சீக்கிரம் ரெடியாயிடும் தகவல் சொல்கிறேன் எனக் கூறினார். பின்னர் 19.06.2025ம் தேதி நான் அவரை போனில் தொடர்பு கொண்ட போது, அவர் அன்று சாயங்காலம் 04.00 மணிக்கு நேரில் அலுவலகம் வாங்க எனச் சொன்னார். அதன்படி நான் அலுவலகத்திற்கு சென்று மீன்வளத்துறை ஆய்வாளர் சகுபர் சாதிக்கை சந்தித்து அவரிடமிருந்து மீனவர் அடையாள அட்டையை பெற்றுக்கொண்டேன். அதன்பிறகு அவரிடம் நான் வாங்கிய இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகிற்கிற்கான உரிமம் மற்றும் கடலில் மீன் பிடிப்பதற்கான அனுமதியை எனது பெயரில் பெறுவதற்குண்டான நடைமுறைகள் பற்றி கேட்டேன். அதற்கு அவர் 1)இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு அருகே நின்றபடி உள்ள ஒரு போட்டோ, 2) படகின் நீளம், அகலம் ஆழம் மற்றும் போட் என்ஜின் நம்பர், 3)ஆதார் கார்டு நகல், 4) குடும்ப அடையாள அட்டை நகல் ஆகியவற்றை எனது வாட்ஸ் ஆப்க்கு அனுப்பிட்டு வரும் திங்கட்கிழமை (23.06.2025) டாக்குமெண்ட் ஜெராக்ஸ்லாம் எடுத்துட்டு ஆபீசுக்கு வந்து எனக்கு போன் பண்ணுங்க என கூறினார். அதன்படி நான் இன்று 23.06.2025ஆம் தேதி மதியம் சுமார் 01.30 மணிக்கு இராமநாதபுரம் மீன்வளத்துறை அலுவலகத்திற்கு சென்று மீன்வளத்துறை ஆய்வாளருக்கு போன் செய்தேன். உடனே அவர் அலுவலகத்திற்கு வெளியே நின்று கொண்டிருந்த என்னிடம் வந்து மேற்படி ஆவணங்களை பெற்றுக்கொண்டு, இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகிற்கான உரிமம் மற்றும் கடலில் மீன் பிடிப்பதற்கான அனுமதி உனது பெயரில் வேண்டுமானால் ரூ.5,100/-ஐ

கொடுக்க வேண்டும் என கூறினார். அதற்கு நான் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.3,500/- தானே என நான் கேட்டதற்கு ரூ.1,600/-ஐ சேர்த்து கொடுத்தால்தான் உனக்கு அனுமதி கிடைக்கும் என கராராக கூறினார். பின்னர் நாளை (24.06.2025) காலை 09.30 மணிக்கு உனது இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகை நேரில் ஆய்வு செய்ய வருவேன். அப்போது நான் கேட்ட மொத்த பணத்தையும் கொடுக்க வேண்டும் என கூறினார். பின்பு நான் யோசித்து பார்த்து அரசுப்பணியை செய்வதற்கு அரசுக்கு கட்ட வேண்டிய தொகை ரூ.3,500/-ஐ விட கூடுதலாக ரூ.1,600/- லஞ்சமாக கேட்ட மீன்வள உதவி இயக்குநர் (வடக்கு) அலுவலகத்தில் பணிபுரியும் மீன்வளத்துறை ஆய்வாளர் சகுபர் சாதிக் என்பவர் மீது புகார் செய்ய முடிவு செய்தேன். ஆகவே, என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட மீன்வளத்துறை ஆய்வாளர் சகுபர் சாதிக் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகத்தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) P.Jeevananthan. Received the complaint on 23.06.2025 at 21.00 hrs and Enquired the Character and Antecedents of the complainant and accused and registered a case in Ramnad V&AC, Cr.No.13/2025 u/s 7 (a) of P.C. Amended Act 2018 at 21.30 hrs. (Sd) M.Kumaresan, Inspector of Police. V&AC, Ramanathapuram 23.06.2025. இதன் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, மாவட்ட அமர்வு நீதிமன்றம் இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

23/06/2025

காவல் ஆய்வாளர்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு

இராமநாதபுரம்.